# விடியல்

## The Dawn

*மாத இதழ், பொழுது – 24*
*ஏப்ரல், 2011*
vidiyalmagazhine.blogspot.com
vidiyalmagazhine@gmail.com



*சிறப்பாசிரியர்*
முனைவர் நா. கண்ணன்
கல்லூரி முதல்வர்

*ஆசிரியர்*
முனைவர் மா. கார்த்திகேயன்
தமிழ்த்துறைத் தலைவர்

*இணை ஆசிரியர்*
முனைவர் ப. சரவணன்
தமிழ் விரிவுரையாளர்

*ஆசிரியர் குழு*
தமிழ் விரிவுரையாளர்கள்
அனைவரும்



*வெளியீடு:*

தமிழ்த்துறை,
கே.எஸ்.ஆர். கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)
திருச்செங்கோடு – 637 215,
நாமக்கல் மாவட்டம், தமிழ்நாடு, இந்தியா.
**www.ksrcasthamizh.blogspot.com**
**www.ksrcas.edu**


# உள்ளடக்கம்


- *கட்டுரைகள்*
  - *தமிழகக்கல்வி* 02
  - *எளிமையும் தலைமையும்* 05
  - *காவல்துறை* 08
  - *இந்தியாவில் மின்னாற்றல் வளம்* 10
  - *பூச்சிக்கொல்லி* ,Dr. Prakash Amte 12
  - *குளோனிங்* 13, Kiran Bedi 15,
  - *ஓசோன் படலம்* 19
- Seed Proteins 04
- *திருக்குறளின் தனிச்சிறப்புகள்* 06
- *சுகமான சுமை, அறிவும் வயதும்* 07
- *கவிதைகள்*
  - *பூமியை நேசி, வாழ்க்கை* 04
  - *சாரல்* 09, *தாய்* 07,
  - *ஆசைநிறைவேறும், நட்பு* 11
  - *தன்னம்பிக்கை* 13.
- *மாதம் ஒரு படைப்பாளர்:*
  - *எழுத்தாளர் ஜெயமோகன்* 16
- *தொடர் கட்டுரை (பகுதி – 4)*
  - *மஞ்சள்காமாலை - சில தீர்வுகள்* 14
- *தொடர் செய்யுள் (பகுதி – 7)*
  - *கே.எஸ்.ஆர். பிள்ளைத் தமிழ்* 20


☺

# தமிழகக் கல்வி

சு. திவ்யா, முதலாண்டு ஆங்கிலம்

*முன்னுரை:*

"கல்வியிற் சிறந்த தமிழ்நாடு, புகழ் கம்பன் பிறந்த தமிழ்நாடு" என்று பாரதியார் தமிழ்நாட்டின் கல்விநிலையைப் பாராட்டியுள்ளார். அக்காலத்தில் தமிழகக்கல்வி சிறந்து விளங்கியது. பெண் கல்வியிலும் அக்காலத் தமிழகம் புகழ் பெற்றிருந்தது. ஔவையார், காக்கை பாடினியார் முதலிய பெண் புலவர்கள் அக்காலத்தில் சிறந்து விளங்கினர். செல்வங்களுள் அழியாச் செல்வமாகிய கல்விச் செல்வத்தைப் பற்றி இக்கட்டுரையில் பகிர்ந்து கொள்கிறேன்.

*பண்டைய காலக் கல்வி:*

பண்டைய தமிழ்க் கல்விமுறை குருகுல வாசத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது. "உற்றுழி உதவியும் உறுப்பொருள் கொடுத்தும் பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே" என்ற மன்னன் நெடுஞ்செழியன் குறிப்பிடுகிறார். இதிலிருந்து கல்வியின் சிறப்பை நன்கு அறியமுடிகிறது.

பண்டையக் காலத்தில் கல்வி கற்றோரே மிகுந்த மேன்மையுடன் கருதப்பட்டனர். அக்கால மக்களின் கல்வி கற்கும்முறை மிகவும் கடினமானதாக இருந்தது. ஏனெனில், அக்காலத்தில் கல்வி கற்கச் செல்லும் மாணவர்கள் குருகுலத்தில் தனது ஆசானுக்குத் தேவையான அனைத்து பணிவிடைகளும் செய்யவேண்டும். குரு குலத்தில் ஒழுக்கம், நற்குணம் போன்றவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும். இவற்றில் இருந்து தவறியவர் கல்வி கற்கத் தகுதியற்றவர் ஆவார். இத்தகைய நிலையிலும் அக்கால மக்கள் தங்களது ஒழுக்க நிலையிலிருந்து தவறாமல் கல்வியை முறைப்படிக் கற்று மேன்மையடைந்தனர்.

*பண்டைய மக்களின் கற்றல் முறை:*

வெறும் இலக்கியம் மட்டும் அல்லாது கணிதம், வானவியம், வாழ்வியல், அறம், பொருள், இன்பம் போன்றவற்றையும், ஆன்மீக நெறியையும் அக்கால மக்கள் கற்றனர். இவை தவிர இசை, ஓவியம், சிற்பம், வாணிபம், மருத்துவம் போன்றவற்றையும் கற்றனர்.

***"கற்க கசடற கற்பவை கற்றபின்***
***நிற்க அதற்குத் தக"***

என்பது வள்ளுவரின் வாக்கு. கற்க வேண்டிய நூல்களை முறைப்படிக் கற்க வேண்டும். பின்னர், அதை வாழ்வில் பயன்படுத்திப் பயன்பெற வேண்டும் என்பதே இக்குறளின் விளக்கமாகும். இதற்கு ஏற்றவாறே அக்கால மக்களும் கற்ற கல்வியைத் தம் வாழ்வில் பயன்படுத்தினர். இன்றைய காலத்தில் பெரிதாகப் போற்றப்படும் விஞ்ஞானம், பொறியியல், எந்திரவியல் போன்றவற்றை அக்கால மக்கள் கற்ற கல்வியில் இடம் பெற்றிருக்கவில்லை என்பதனையும் நாம் உணரவேண்டும்.

*கல்வியின் வளர்ச்சி:*

சோழப்பேரரசர்கள் காலத்தில் கல்வி வளர்ச்சி உச்சக்கட்ட நிலையை எட்டியது. அதன்பின், விஜயநகரத்து அரசர்கள், நவாப்புகள் பிறகு ஆங்கிலேயர்கள் ஆண்ட காலங்களில் படிப்படியாகக் குருகுலமுறை குறைந்து வெறும் திண்ணைப் பள்ளிக் கூடங்களே இருந்தன. ஆங்கிலேய மிஷனரிகள்

அந்நிலையில் நவீன கல்வியைப் பரப்புவதில் பெரும் தொண்டாற்றினர். மீண்டும் பள்ளிக்கூடங்கள், பாடசாலைகள் மறுமலர்ச்சியுற்றன. தமிழ்க் கற்போர் குறைந்து ஆங்கிலக்கல்வி செழித்து வளர்ந்த போதிலும் நவீனக் கல்விமுறைப் போல விஞ்ஞானம், வரலாறு, பொருளாதாரம் போன்ற பாடங்கள் கற்பிக்கப்பட்டன. ஆசிரியப் பயிற்சி நிறுவனங்களும், கல்லூரிகளும் திறக்கப்பட்டன.

ஆசிரியப் பயிற்சி பெறுவதற்கு முன்னரே சென்னைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், ஆந்திரப் பல்கலைக்கழகம் ஆகியன இருந்தன. 19ஆம் நூற்றாண்டில் பொதுக்கல்வி இயக்குநரகம் தோன்றியபின், கல்வி வளர்ச்சி மேலும் மேலோங்கியது.

*கல்வியின் சிறப்பு:*

***"கற்றோர் என்போர் கண்ணுடையோர் முகத்திரண்டு***
***புண்ணுடை யோர்கல்லா தவர்."***

என்ற குறளின் வாயிலாகக் கற்றோரைக் கண்ணுடையவர் ஆவர். கல்லாதவர் முகத்தில் இரு புண்ணுடையவர் ஆவர் என்ற கருத்து தெளிவாகிறது. இக்குறளின் வழியாகக் கல்வியின் சிறப்பை வள்ளுவர் விளக்கியுள்ளார்.

அக்கால பேரரசர்கள் கல்வி கற்றோரையே தனக்கு வழிகாட்டியாக வைத்திருந்தனர். பொருட்செல்வங்கள் முதலிய பிற செல்வங்கள் மிகுதியாக ஒருவனிடம் இருந்தாலும் அவை பெரிதாகப் போற்றபடுவதில்லை. ஆனால், அழியா செல்வமாகிய கல்வியே சிறந்ததாகப் போற்றப்படுகிறது. கற்றவர்கள் தாம் செய்யும் செயலால் தமக்கு ஏற்படும் தீங்கினை ஆராயும் திறன் பெற்றவர் ஆவார். ஆனால், கல்லாதவர்களால் அவ்வாறு ஆராய இயலாது.

*தற்காலக் கல்வி:*

அக்காலக் கல்விக்கும், இக்காலக் கல்விக்கும் பல வேறுபாடுகள் இருக்கின்றன. அக்கால மக்களின் கல்வி கற்கும் முறை அனுபவத்தின் அடிப்படையாகவும், வாழ்விற்குப் பயனுடையதாகவும் இருந்தது. ஆனால், இக்கால கல்வி படிப்பதற்கு மட்டுமே பயன்படுகின்றது. கற்றதை வாழ்வில் பயன்படுத்தும் வாய்ப்பும் பயன்படுத்து வோரும் மிகக்குறைவு. 'கல்வி என்பது பணிப்புரிவதற்கு உதவும் ஓர் அங்கமாகும். கல்வி கற்பதன் மூலம் வாழ்வில் நல்ல நிலையை அடையலாம்' என்பதே இக்கால மக்களின் மனநிலை ஆகும்.

*முடிவுரை:*

***"கற்கை நன்றே கற்கை நன்றே***
***பிச்சை புகினும் கற்கை நன்றே"***

என்ற ஔவையாரின் அமுத அடிகள் வாழ்வில் கல்வி கற்றல் ஒரு முக்கிய அங்கம் என்பதை வலியுறுத்துகின்றன. எனவே, அழியாச் செல்வமாகிய கல்வியை நன்முறையில் கற்று, வாழ்வில் பயன்பெறுவோம்.

**"நம் இரு கண்களாய் இருந்து**
**உலகத்தை நமக்குணர்த்தி**
**லட்சக்கணக்கான கண்கள்**
**நம்மைப் பார்க்கும் அளவுக்கு**
**நம்மை உயர்த்துவது**
**நாம் பெறும் கல்வியேயாகும்"**

☺

## பூமியை நேசி

*"பூமியாகிய நான்*
*ஓர் உருண்டைதான்*
*உயிர் கொண்ட உருண்டைதான்*
*அனைத்து வளங்களையும்*
*அள்ளித் தந்தேன் உனக்கு*
*நான் தந்த உயிரினங்களுக்கு*
*இல்லை ஒரு கணக்கு.*
*தீதொன்றும் கருதாதென்னை*
*தீப்பிடிக்க வைத்தாயே மனிதா*
*உன் சுயநலத்தால்.*
*காக்கை கதை சொல்கிறாயே*
*அக்காக்கை வாழ மரமுண்டோ இங்கு.*
*உன் நடத்தையால்தான்*
*நான் என் கோபத்தைச்*
*சுனாமி மூலமாகக் காட்டி*
*என்னை நானே சிறிது அழித்துக்*
*கொண்டேன் - இன்னுமா என்னைப்*
*புரியவில்லை உனக்கு?.*
*நான் அன்பெனும் சிகரமானவள்*
*அறிவெனும் சிகரமானவள்*
*தாயாகிய மரங்களையும்*
*தந்தைப் போன்ற விலங்குகளையும்*
*பறவைகளையும்*
*கொண்டவள்தான் நான்.*
*மனிதா நீயும் என்*
*சேயாக வா - பேயாக அல்ல*
*என்னை உன் மூச்சைவிட*
*மேலாக நேசி.*
*நான் என்றும்*
*உன்னுடன் இருக்கும் சகவாசி - நீ*
*என்னுள் வாழும் சுகவாசி."*

**அ. ஹேமாவதி,**
முதலாண்டு கணினிப் பயன்பாட்டியல் 'அ'

☺

## வாழ்க்கை

*"வாழ்க்கை*
*மாலையில் மரணம் என்று*
*தெரிந்தும் கூடக்*
*காலையில் கண்ணீர்*
*வடிப்பதில்லை பூக்கள்.*
*அதன் சிரிப்பில்*
*வாழ்வைக் கற்றுக்கொள்."*

**கஸ்தூரி,**
முதலாண்டு வேதியியல்

☺

## SEED PROTEINS

C. GOKULNATH
B.Sc 2ND Year (BC)

Plant seed containing more than 15% Protein contend as a storage protein.

Legume seeds of soya, peant and drped peas and beans of oil seeds of sunflower, sesame and cotton are useful as; human food.

Legume foods contain between 18% of 42% Protein. But deficient in sulphur containing AAS.

Hish Protein content (about 40%) and absence of toxic compounds soya bean seeds are extensively used in foods.

The gelation property of soya proteins in useful in manufacture of canned meat, soup and dairy products. Progel proteins are involved in gel formation.

☺

# எளிமையும் தலைமையும்

**இ. வினோத்குமார்,**
முதலாண்டு ஆங்கிலம்

*முன்னுரை:*

படிக்காத மேதை, ஏழைப் பங்காளன், பாரத ரத்னா, கர்மவீரர், கிங்மேக்கா, என்று பலவாறு அழைக்கப்படும் காமராஜர் எளிமையான தலைவராகத் திகழ்ந்தார். அவரைப்பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

*பிறப்பு:*

இராமநாதபுரம் மாவட்டம் விருதுநகரில் 1903ஆம் ஆண்டு ஜூலை மாதம் 15ஆம் நாள் பிறந்தார்.

இவரின் தந்தை பெயர் குமாரசாமி நாடார், தாயார் சிவகாமி அம்மாள் ஆவார். முதலில் இவரை அவரின் குலதெய்வப் பெயரை வைத்து அழைத்தனர். சிவகாமி அம்மாள் காமராஜரை இராஜா என்று செல்லமாக அழைத்தார். பின்பு காமாட்சி - இராஜ என்ற இரண்டு பெயரையும் இணைத்துக் காமராஜன் என்று அழைத்தனர்.

*நாட்டுப்பற்று:*

பன்னிரண்டாவது வயதில் இவரின் தந்தை உடல்நலக்குறைவால் மரணம் அடைந்தார். 'இளம் கன்று பயம் அறியாது' என்ற பழமொழிக்கேற்ப அவர் இளம் வயதில் செயல்பட்டார். இவர் பெரும்பாலும் வீர விளையாட்டுகளையே விரும்புவார். இதனை அறிந்த இவரது அம்மா இவர் படிப்பை நிறுத்திவிட்டு துணிக் கடையிலேயே வேலைக்கு அமர்த்தினார். அவருக்கு அந்த வேலை பிடித்து விட்டது. வேலை போக மற்ற நேரங்களில் நண்பர்களுடன் அரட்டை அடித்துக்கொண்டுப் பொழுதை போக்குவார்.

அந்தச் சமயத்தில் முதல் உலகப் போர் தொடங்கியது. போர் செய்திகளும் முக்கிய செய்திகளையும் படிப்பதிலேயே அதிக ஆர்வத்தைச் செலுத்தி வந்தார். இதனாலேயே நாட்டுப்பற்று மனத்தில் ஏற்பட்டு, காங்கிரஸ் கட்சியின் மீது ஆர்வம் பெருகிற்று.. மேலும் இவர் காங்கிரஸ் கட்சியின் பொது கூட்டங்களில் கலந்து கொள்வதும் உண்டு.

*காங்கிரசும் காமராஜரும்:*

தாழ்த்தப்பட்ட மக்களுக்காகத் தலைவர்கள் அனைவரும் சத்தியாகிரகம் ஒன்றை மேற்கொண்டார். அதன் மூலம் சிறைக்கும் சென்றார். பின்பு படிப்படியாக இவர் அரசியல்வாதியாக ஆனார். மேலும் அவர் சாத்தூர் சட்டசபைத் தொகுதியில் காங்கிரஸ் கட்சி வேட்பாளராக நின்று போட்டியிட்டார். காங்கிரஸ் கட்சி பெரும்பான்மையான இடங்களில் வென்றது. காமராஜரும் சாத்தூர் சட்டசபை தொகுதியில் வெற்றிபெற்றார். 1940 ஆம் ஆண்டில் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவரானார்.

*முதலமைச்சர் 'காமராஜர்' :*

1954 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 13-ஆம் நாள். அதாவது தமிழ் வருடப்பிறப்பன்று காமராஜர் தமிழ்நாட்டில் முதலமைச்சர் ஆனார்.

*கல்விச்சேவை:*

இளமைப் பருவத்தில் தாம் முறையாக கல்வி கற்க இயலாத சூழலை எண்ணிப் பிற்காலத்தில் மற்ற குழந்தைகள் கல்வி கற்க வேண்டும்

என்று இலவசக் கல்வித் திட்டத்தைக் கொண்டு வந்தார். இலட்சக்கணக்கான ஏழை குழந்தைகளும் பகல் உணவு கிடைக்காததால் பள்ளிக்கு வராத நிலை ஏற்பட்டது. அனைத்து குழந்தைகளும் இலவச மதிய உணவு வழங்கினார். மேலும், இலவச சீருடை போன்றவையும் வழங்கினார்.

*அணைக்கட்டு:*

காமராஜர் ஆட்சிக்காலத்தில் சாத்தனூர் அணை கட்டப்பட்டது. இதன் மூலம் 20,000 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெற்றன. இதற்கு சுமார் இரண்டரை கோடி ரூபாய் செலவானது.

மதுரையில் உள்ள வைகை அணையும் இரண்டரைக் கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்பட்டது. 3 கோடி செலவில் அமராவதி அணை ஏற்படுத்தப்பட்டது. இதன் மூலம் 47,000 ஏக்கர் விவசாய நிலம் பயனடைந்தது. நெல்லை மாவட்டம் தாமிரபரணி, ஆரணியாறு போன்றவற்றைக் கட்டினார்.

*கர்மவீரர் மரணம்:*

தியாக சீலரான காமராசர் இன்னும் பல இன்னும் பல ஆண்டுகள் வாழ்ந்து நாட்டு மக்கள் வாழ நல்வழி காட்டுவார் என்று தான் அனைவரும் நம்பினர். ஆனால், அனைவரின் நம்பிக்கையும் வீணாயிற்று. 1975ஆம் ஆண்டு அக்டோபர் இரண்டாம் நாளன்று அண்ணல் காந்தி அடிகளின் பிறந்தநாளன்று வழக்கம் போல் காலை தன் உணவை உண்டபின் படுக்கையில் படுத்துத் தூங்கியவர் அப்படியே மரணமடைந்தார்.

சட்டையில் 100 ரூபாய், வங்கிக் கணக்கில் 125 ரூபாய், கதர் வேட்டி 4, கதர்சட்டை 4, கதர் துண்டு 4, செருப்பு ஒரு ஜோடி, கண்கண்ணாடி 1, பேனா 1, சமையலுக்கு தேவையான பாத்திரங்கள் ஒன்று இரண்டு ஆகியன மட்டுமே அவரது சொத்தாக இருந்தன.

*முடிவுரை:*

காமராஜர் தமிழகத்தின் தலைவிதியை மட்டும் நினைப்பவர் அல்ல. இந்தியாவின் தலைவிதியையும் நினைப்பவர். இணையற்ற இந்திய தலைவர்களுள் காமராஜர் இமயமானார். இவரைப் போற்றி அனைவரும் செயல்படுவோம். வெற்றிபெறுவோம்.

☺

## திருக்குறளின் தனிச்சிறப்புகள்

**முனைவர் நா. கண்ணன், முதல்வர்.**

திருக்குறளை நாம் மூன்றாம் வகுப்புமுதல் பயின்று வருகின்றோம். ஆனால், அதில் உள்ள சில நுட்பமான சிறப்புகளை நாம் அறிந்துள்ளோமா?

திருக்குறளின் 133 அதிகாரத் தலைப்புகளுள் 'குறிப்பறிதல்' என்ற தலைப்பு மட்டும் பொருட்பாலிலும் இன்பத்துப்பாலிலும் இடம்பெற்றுள்ளது.

திருக்குறளில் 'ஔ' என்ற எழுத்து இல்லை.

திருக்குறளுக்கு மிகப் பழைய உரையாசிரியர்களுள் தருமரும் மணக்குடவரும் முதன்மையானவர்கள். மணக்குடவர் உரை தற்போது கிடைக்கின்றது.

போ, மோ, நூ, பீ, மை, தோ முதலிய சொற்கள் ஒரே ஒருமுறை மட்டுமே இடம்பெற்றுள்ளன.

☺

# சுகமான சுமை

**ச.பிரியங்கா,**
முதலாண்டு ஆங்கிலம்

ஒருமுறை காந்திஜி கலந்து கொண்டிருந்த ஒரு கூட்டத்திற்கு பன்னிரண்டு வயது சிறுமி ஒருத்தி வந்திருந்தாள். உட்கார இடமில்லை. அதனால் தன்மூன்று வயது தம்பியைத் தூக்கியபடி நின்று கொண்டிருந்தாள். இதைக் கண்ட காந்திஜி அந்தச் சிறுமியிடம் சென்றார்.

'ஏம்மா' இந்தக் கனத்தைத் தூக்கிக் கொண்டு பொறுமையாக உன்னால் எப்படி நிற்க முடிகிறது? என்று வினவினார். அதற்கு அந்தச் சிறுமி, 'கனமா இது' என் தம்பி'... காந்திஜி அசந்து போய்விட்டார். அதாவது 'இவன் என் தம்பி என்னும் போது எப்படி கனக்க முடியும்? என்பது அவள் கேள்வி.

விஞ்ஞான பூர்வமாக இது சரியாக இல்லாமல் இருக்கலாம். ஆனால் மன இயலின்படி இது சரியானதுதான். நமக்கு பிடித்தவர்கள் ஏதாவது உபதேசம் செய்தால் அதை நாம் கேட்டுக் கொள்வதும், பிடிக்காதவர்கள் நல்ல ஆலோசனைகளைக் கூறினால் கூட நாம் பொறுமை இழந்துபோவது இந்த காரணத்தால் தான்.

☺

# அறிவும் வயதும்

**ப. வினோதா,**
முதலாமாண்டு ஆங்கிலம்.

அமெரிக்க அரசாங்கத்தின் , 'சுப்ரீம் கோர்ட்' பிரதம நீதிபதியாக பணியாற்றியவர் ஆலிவர் வெண்டல் ஹோல்ம்ஸ்.

இவர் தன்னுடைய 96 வயது வரையிலும் இந்த பதவியில் இருந்து பணியாற்றிவந்தார்.

ஜனாதிபதியாக இருந்த ரூஸ்வெட் இவரது நெருங்கிய நண்பர். ரூஸ்வெட் ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்றதும் தன் அன்பையும், மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்ளும் பொருட்டு வெண்டலின் இல்லத்துக்கு வந்தார்.

இவர் வந்திருந்த நேரம் வெண்டல், பிளோட்டோ எழுதிய தத்துவ நூலைப் படித்துக் கொண்டிருந்தார்.

இதைக் கண்ட ரூஸ்வெட் இவரிடம், 'இந்த வயதில் பிளேட்டோவின் நூலை ஏன் படித்துக் கொண்டு இருக்கிறீர்கள்?' என்று கேட்டார்.

வெண்டல் புன்னகையோடு, 'என் அறிவை வளர்த்துக் கொள்ளத்தான்' என்று பதிலளித்தார்.

☺

# காவல்துறை

**முனைவர் மா. கார்த்திகேயன்,**
தமிழ்த்துறைத் தலைவர்.

கண்ணன் இமை காப்பது போல் நாட்டை பாதுகாக்கும் கடமை தவறா வீரர்களின் துறை தமிழகத்தில் காவல்துறை.

தமிழகத்தின் காவல்துறை 1969 ஆம் ஆண்டிலிருந்து தொடங்குகிறது.

1659- முன்னாள் மதராஸ்பட்டிணம் இந்நாள் சென்னை நகரின் பாதுகாப்புக்காக பெத்தநாயக் என்பவரை ஆங்கிலேய அரச நியமித்தது. காவல்துறை என்ற கட்டமைப்பின் முதல் படிக்கல்

1770- பொது அமைதி, பொது சுகாதாரம், ஒழுங்கு பாதுகாக்க போலீஸ் வாரியம் அமைக்கப்பட்டது.

1780-காவல் கண்காணிப்பாளர் (S.P.) நியமிக்கப்பட்டார்.

1782- தவறுகளைத் தடுக்கவும், மோசடிகளைத் தடுக்கவும் காவல் துறை உருவாக்குவது குறித்து விரிவான திட்டத்தை போ.ஃ.பாம் உருவாக்கினார்.

1791 – கொத்வால் போலீஸ் முறை ஒழிக்கப்பட்டது. அதற்குப் பதிலாக பாலிதர் முறை அமல்படுத்தப்பட்டது.

1806 – முதலாவது எஸ்.பி.-வால்டர் கிராண்ட் பதவி ஏற்றார்.

1815 – மெட்ராஸ் எஸ்.பி.யாக தாமஸ் ஹாரிஸ் காவல் பணியை தொடங்கினார்.

1856 – மெட்ராஸ் சிட்டியின் முதல் காவல் ஆணையர் நியமிக்கப்பட்டார்.

1858 – தலைமை போலீஸ் ஆணையர் (I.G) தலைமையிடம் அமைந்துள்ள கட்டிடம் மாதம் (90) ரூபாய்க்குக் குத்தகைக்கு எடுக்கப் பட்டது.

1895 – கைவிரல் ரேகைப் பிரிவு தொடங்கப்பட்டது.

1906 – குற்றப்புலனாய்வு பிரிவு தொடங்கப்பட்டது

1909 – சிங்க்ஸ் போலீஸ் பதக்கம் உருவாக்கப்பட்டது.

1928 – CID – போலீஸ் பிரிவு, மற்றும் (CBCI) என இரண்டு பிரிவுகள் பிரிக்கப்பட்டன.

1929 – சட்ட ஒழுங்கு, மற்றும் போக்குவரத்து பிரிவு பிரிக்கப்பட்டது.

1946 – போலீஸ் வயர்லஸ் பிரிவு தொடங்கப்பட்டது

1951 – மெட்ராஸ் மோப்ப நாய்ப்படை உருவாக்கப்பட்டது

1956 – போலீஸ் ரேடியோ அலுவலகம் உருவாக்கப்பட்டது.

1959 – தமிழகக் காவல்துறை நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டது.

1960 – போலீஸ் ஆய்வு மையம் உருவாக்கப்பட்டது

1971 – போலீஸ் கம்யூட்டர் பிரிவு உருவாக்கப்பட்டது.

1973 – தமிழகத்தில் முதன் முதலாக பெண்காவலர்களும், பெண் துணைஆய்வாளர்களும் நியமிக்கப்பட்டனர்.

1979 – தமிழக காவல்துறையின் தலைவர் பதவியாக டி.ஜி.பி. பதவி உருவாக்கப்பட்டது.

1981 – தமிழ்நாடு காவல் வீட்டு வசதிவாரியம் உருவாக்கப்பட்டது

1993 – சிறப்பு அதிரடிப்படை உருவாக்கப்பட்டது

1994 – கடலோரக் காவல் படைபிரிவு உருவாக்கப்பட்டது

2001 – தமிழக காவல்துறை 91,331, போலீஸார், 11 சரகங்கள், 30 போலீஸ் மாவட்டங்கள், 2 ரயில்வே மாவட்டங்கள் 6, ஆணையரகங்கள், 189 துணை கோட்டங்கள் 1276, காவல் நிலையங்களுடன் விஸ்வரூபம் எடுத்து நின்றது.

2006 – ஆசியாவிலேயே மிகப் பெரியதும், நவீனதுமான புழல் மத்திய சிறை திறக்கப்பட்டது.

2007 – சென்னை காவல்துறை 150 ஆண்டுகளைக் கடந்து வளர்ந்து வருகின்றது.

☺

## சாரல்

**வி.பூங்கொடி,**
முதலாமாண்டு வேதியியல்

***“நீ! என் மேனியில் விழும்போது***
***என் மனம் குளிர்கின்றது.***
***ஒவ்வொரு துளியும் முத்துக்***
***கற்களைப் போல் பரவி***
***மக்கள் குறைகளைத் தீர்க்கும்***
***இயற்கைப் படைப்பே!***
***மேகங்கள் கருமையாய் மாறிப்***
***பூமியில் விழுந்து***
***மண்ணைக் குளிர வைக்கும்***
***மங்கலம் நிறைந்த சாரலே!***
***பார்ப்பவரை வாவென்று அழைக்கும்***
***துளித்துளி மின்னலே!***
***பசுமையை வாழவைக்கும் சின்னச்***
***சின்ன துளிச் சாரலே!”***

☺

# இந்தியாவில் மின்னாற்றல் வளம்

**ஏ.கீர்த்தனா,**
வேதியியல் துறை

நாட்டில் மிகப்பெரும் பிரச்சினையாக மின்தட்டுப்பாடு உள்ளது. இந்தத் தட்டுப்பாட்டின் காரணமாகப் பல தொழில்கள் மிகவும் நலிவடைந்துள்ளது. இதற்கான மூலக்காரணங்களைக் கண்டடைவதும் அதற்கான தீர்வுகளை வழங்குவதும் இக்கட்டுரையின் நோக்கமாகும்.

*மின்சாரத்தின் பயன்பாடு:*

நாளுக்கு நாள் மின்சாரத்தின் பயன்பாடு வீடுகளிலும் தொழிலகங்களிலும் அதிகரித்துக் கொண்டே வருகிறது. 1994ஆம் ஆண்டு மொத்த மின் உற்பத்தி 78000 மெகாவாட் எனவும், 2007ஆம் ஆண்டு 131,000 மெகாவாட் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இன்று அதன் தேவை கணிசமாக தெரியவில்லை. ஆனால் அதன் பயன்பாடு அதிகரித்துக் கொண்டே செல்கிறது.

*கணிப்பீடு:*

இந்தியப் புவியியல் நில அளவைத்துறையின் மதிப்பீட்டின் படி தற்போது 111.88 பில்லியன் டன் நிலக்கரி மட்டுமே நம்மிடம் உள்ளது. நாம் ஒவ்வொரு ஆண்டும் 56 மில்லியன் டன் நிலக்கரியைப் பயன்படுத்துகிறோம்.

*நிலக்கரியின் பயன்பாடு:*

ஒவ்வொரு வருடமும் இப்படி சென்று இறுதியில் ஆண்டொன்றுக்கு 195 மில்லியன் டன் உயரும் என நம்பப்படுகிறது. தோராயமாக 2004-2005 ஆண்டில் இந்தியாவின் தேவைப்படும் புள்ளி விவரம்.

**ஆற்றலின் மூலம் தேவைப்படும் அளவு**

1980-1990 - 2004-2009

***நிலக்கரி***

94 மில்லியன் டன் - 450 மில்லியன் டன்

***எண்ணெய்***

32 மில்லியன் டன் - 94 மில்லியன் டன்

***மின்சாரம்***

221 பில்லியன் அலகு - 919பில்லியன் அலகு

மக்கள் தொகை எண்ணிக்கையில் இந்தியா உலகில் இரண்டாம் இடத்தை வகிக்கிறது. ஆற்றல் மூலங்களின் தேவை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது. இதனை ஈடுசெய்ய இதில் புதுப்பிக்கத்தக்க, புதுப்பிக்க இயலாத என இரு ஆற்றல் மூலகங்கள் உள்ளது.

*ஆற்றலின் தேவையை உணர்ந்து பயன்படுத்துதல்:*

ஆற்றல் மூலங்களின் தட்டுப்பாடு அதிகமாக இருப்பதால் கிடைக்கக் கூடிய ஆற்றலை மிகக் கவனமாகப் பயன்படுத்த வேண்டும்.

இதன் தேவையை உணர்ந்து சிக்கனமாகப் பயன்படுத்தினால் இந்தத் தட்டுப்பாட்டை எளிதில் தீர்க்கலாம். இதனை Energy concervation (பேணுகை) என்கிறோம்.

*சேமிக்க (அ) பாதுகாக்க வழிகள்!*

மின்விசிறி, விளக்குகள், குளிரூட்டி, வெப்ப மூட்டி, காற்ப்பதனி போன்ற சாதனங்களைத் தேவையான நேரங்களில் பயன்படுத்துதல்

சூரிய ஆற்றல் (Solar Energy) இயங்கும் சாதனங்களை அதிக அளவு பயன்படுத்துதல் மின்னாற்றலைத் தயாரிக்கவும், விவசாயத்திற்கு நீர் பாய்ச்சுவதற்கும் காற்றாலைப் பயன்படுத்துதல்

சமையலுக்கும், விளக்குகளுக்கும் எரிவாயுக்களைப் (சாணம் போன்ற இயற்கை எரிவாயுவை) பயன்படுத்துதல்.

எரிபொருள் சேமிக்கக் கூடிய எந்திரம், வாகனங்கள் பயன்படுத்தி, அதனை சரியான முறையில் பயன்படுத்தலாம்.

பெட்ரோல் மற்றும் டீசல் அதிகம் பயன்படுதலுக்குப் பதிலாக சூரிய ஆற்றல் வாகனம் மற்றும் எந்திரங்களைப் பயன்படுத்துவதன் மூலம் சுற்றுச் சூழல் மாசுவை ஓர் அளவு குறைக்கலாம்.

இந்த மாதிரி புகைகளைக் குறைப்பதன் மூலம் நம் உடல் மற்றும் சுவாச நோய்களை வெகுவாகக் கட்டுபடுத்தலாம்.

வாயுக் குழாய்கள், எண்ணெய் குழாய்கள் மற்றும் நீர்க்குழாய்கள் முறையாகப் பயன்படுத்துவதன் மூலம் புவியின் வளத்தைப் பேணிக்காக்கலாம்.

பொதுமக்களிடையே ஆற்றல் சேமிப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

☺

# ஆசை நிறைவேறும்

**ப.சௌந்தரியா,**
முதலாண்டு வேதியியல் துறை

**"பயமென்னும் பேய்தனை ஒழித்து**
**துன்பம் என்னும் பிசாசினை விரட்டி**
**நம்பிக்கை என்னும்**
**கடவுளை அழைத்தால்தான்**
**லட்சியம் என்னும் ஆசை நிறைவேறும்."**

☺

# நட்பு

**பி.தீபா**
முதலாண்டு வேதியயில் துறை

**"முதல் முறையாக**
**என் நண்பன் அழுகிறான்.**
**எழுந்து அவன் கண்ணீரைத் துடைக்க**
**நினைக்கிறேன் - நான்**
**இறந்து விட்டதையும் மறந்து"**

☺

# பூச்சிக்கொல்லி

**கே.குமரேசன்,**
இரண்டாமாண்டு, உயிர்வேதியியல்

உயிர் பூச்சிக்கொல்லியான ஒரு வகையான பூச்சிக்கொல்லி எண்டோ சல்.்.பான். எண்டோசல்.்.பான் பெரு மளவில் பாதிப்பை ஏற்படுத்து கின்றன.

அதாவது தோல் புற்றுநோய், வயிறு, கால் மற்றும் முகம் கை மூளை போன்றவைகள் பெரும் பாதிப்புக் குள்ளாகின்றன.

இவை இந்தியாவில் தற்போது தமிழ் நாட்டில் உபயோகிக்கின்றன. இவற்றைத் தவிர்க்கவேண்டும்.

இம்மருந்தைக் கேரள அரசு தடை செய்யப்பட்டுள்ளது. உலகளவில் பெரும்பாலான பகுதிகளில் எண்டோ சல்.்.பான் என்ற பூச்சிக்கொல்லி மருந்து தடை செய்யப்பட்டுள்ளது.

எடுத்துக்காட்டாக ஜப்பான், ரஷ்யா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் எண்டோசல்.்.பான் தடை செய்யப்பட்டுள்ளது.

எண்டோசல்.்.பாசர் பயன்படுத் தப்பட்டால் மனித குலத்துக்கும் தாவர வளத்திற்குப் பெரும் பாதிப்பு ஏற்படும் என்பதை நினைவில் கொள்வோம்.

☺

# Dr.Prakash Amte

Medical Doctor and Social worker
from Maharastra, India

Son of Magsaysay awardee and legend Baba Amte or Prakash Amte is a medical doctor and social worker from Maharastra, India. He abtained a medical degree from GMC, Nagpur. His brother Vikas, also a dedical doctor, coordinates the activities at their father's ashram at ahanlwan and manager the sastellite projects and hospitals. He Moved to Hemalkasa to start the lok biradari prakalp in 1973, a Project for the development of tribal people, most of whom were the madic, gond in the forests of gadchirolli district. The project transformed in to three things a hospital lok biradavi pakalp pavadhana, a residentical school lok biradavi prakalp ashram shala and an orpinanage for injured wild animals the mate Animal arc. It seeks to improve wealth and educational services for tribals in the area. He malkasu lies in a tribal belt and the project provides wealth care to about 40,000 individuals annually. The lok Biradai prakalp Ashram School has over 600 students residenty and day-Scholars.

Dr. Amte and his wife or mandakini Amte were awarded the mag saysay Award for, community Leadership in 2008 for their Philanthropic work in the form of the lok the madia gonds in gadthirali district of Maharashtra and the and the neighbouring states of Andhra Pradesh and Madhya Pradesh together, they have decided to work towards the upliftment of those who have no one to turn to and have cloggealy pursued the objective to bring a better life to forthing and helpess tribes of the region. We saslute this great husband wife team resolve of steal.

**S.Praveena,**
First Year B.Sc Chemistry

# தன்னம்பிக்கை

**"தன்னம்பிக்கை என்னும்**

**நார் மட்டும் -நம்**

**கையில் இருந்தால்,**

**உதிர்ந்த பூக்கள்**

**ஒவ்வொன்றாய் வந்து**

**ஒட்டிக்கொள்ளும் - கழுத்தில்**

**மாலையாகக் கட்டிக் கொள்ளும்"**

**வி. கோகிலா,**
முதலாண்டு வேதியியல்

☺

# குளோனிங்

**ரா.பாரதி,**
இரண்டாமாண்டு நுண்ணுயிரியியல்

குளோனிங் என்பது மரபொத்த உயிரிகளைப் பிரதிகளாக உற்பத்தி செய்யும் செய்முறையாகும்.

1950ஆம் ஆண்டு ஆர்.பிரிக்ஸ் மற்றும் டி.கிங் ஆகிய இரண்டு கருவியாளர்கள் உட்கரு மாற்றிப் பொருத்துதல் என்னும் செய்முறையை உருவாக்கினர்.

டாக்டர் அயான் வில்மட் என்பவர் டாலி என்ற செம்மறி ஆட்டுக்குட்டியை குளோனிங் முறைப்படி உருவாக்கினார். உட்கரு மாற்றிப் பொருத்துதல் முறையைப் பயன்படுத்தினார்.

பெண் செம்மறி ஆட்டுமடியில் உள்ள இரட்டை குரோமோசோம் (2n) கொண்ட உடல் செல்லை தேர்ந்தெடுத்தார். மற்றொர ஆட்டின் அண்டத்தைப் பிரித்தெடுத்தார். கருமுட்டை 2n இரட்டை எண் கொண்ட குரோமோசோம்களின் தொகுதியினை உட்கரு மாற்றிப் பொருத்துதல் மூலம் முழுவதும் பெற்றது. இரட்டை எண் (cl) உட்கரு கொண்ட கருமுட்டை, அதன் தாய் செம்மறி ஆட்டின் கருப்பையினுள் மீண்டும் பொருத்தப் பட்டது. கருமுட்டை மற்றொரு புதிய தாய்ச் செம்மறி ஆட்டின் கருப்பையினுள் வளர்ந்து. செம்மறி ஆட்டுக் குட்டியைத் தோற்றுவித்தது.

உருவான குளோனிங் செம்மறி ஆடு மரபு பண்புகளில் இரட்டை எண் உட்கருவை (மடிச்செல்) வழங்கிய செம்மறி ஆட்டினை ஒத்திருக்குமேயன்றி, கருமுட்டை வழங்கிய செம்மறி ஆட்டினை ஒத்திராது.

☺

# மஞ்சள்காமாலை

## சில தீர்வுகள்

**முனைவர் ப. இராஜேஷ்,**
தமிழ் விரிவுரையாளர்

பண்டையக் காலந்தொட்டு இன்றுவரையிலும் மக்களுக்கு ஏற்படுகின்ற நோய்களுக்குள் அபாயகரமானது மஞ்சல் காமாலை நோயாகும்.

இந்நோய்க்கு மூன்றுவிதமான மருத்துவமுறைகளும் பல வகையான மருந்துப் பொருள்களையும் நாட்டுப்புற மக்கள் கையாண்டு வருகின்றனர்.

சிறிதளவு கீழ்காய்நெல்லி (கீழாநெல்லி) இலையை அரைத்து ஒரு தம்ளர் பசுப்பாலில் கலந்து காலையிலும் மாலையிலும் பருகவேண்டும்.

நோயாளி தன் உணவில் உப்பையும் மஞ்சளையும் தவிர்க்கவேண்டும். குளிர்ந்த நீரில் கையை நனைக்கக் கூடாது.

காய்ச்சிய தேங்காய்ப்பாலினை (ஒரு தம்ளர்) காலையிலும் மாலையிலும் தலையில் தேய்த்துக் குளிக்கவேண்டும்.

சிறுபயிறு, கீரை (அகத்திக்கீரை) இரண்டையும் சேர்த்துக் குழம்பு வைத்து உண்ணவேண்டும்.

இம்மூன்று மருந்துக்களும் உள்மருந்தாகக் காலையிலும் மாலையிலும் கொடுக்கப்படவேண்டும்.

இம்மூன்று மருந்துகளும் பயன்படுத்தும முறை பற்றிய அட்டவணை வருமாறு:

| *மருத்துவம்* | *மருந்துப் பொருளின் அளவு* | *செய்முறை* | *கொடுக்கும் அளவு* | *பத்தியம்* |
|---|---|---|---|---|
| கீழ்க்காய் நெல்லி, பசுப்பால் | சிறிதளவு கீழ்க்காய்நெல்லி, ஒரு தம்ளர் பசுப்பால் | அரைத்தல் | ஒருசங்கு | மஞ்சள், உப்பு சேர்க்கக் கூடாது, குளிர்ந்த நீரில் கை நனைக்கக் கூடாது |
| தேங்காப்பால் | ஒரு தம்ளர் | காய்ச்சுதல் | அரைத்தம் ளர் | இல்லை |
| சிறுபயறு, அகத்திக்கீரை | ஒரு பிடி சிறுபயறு, ஒரு பிடி அகத்திக்கீரை | கறிவைத்தல் | சிறிதளவு | இல்லை |

# KIRAN BEDI



Born in Amritsar, Kiran Bedi was second of the Four daughters of her parents. She did her schooling from the sacrod Heart convent school, Amritsar, where she joined the National Cadat Corps (NCC) Lator, She obtained her B.A in English from the Government college for Women Amritsar. She then earned a maser's degree in po9litical Science from Punjab University Candigarh, topping the University.

She began her career as a lecturer in political scieneat khalsa college for women Amritsar, India. In July 1972, She Joined the Indian police Scrvice and became the first woman to de so. It is not difficult to imagine the situation she had to face at a time when coomen were supposed to stay at home cook care for children. but she resolutely performed her duty and was soon rising up the ranks purely based on her merit. Kiran bedi influenced several decisions of the Indian Police service particularly in the areas of the Indian police service Particularly in the areas of control over narcotics, traffic management, and VIP Security she believed that even convicts are human and should be treated with dignity and care.

During her stint as the Inspector General of Prisons, Tihar jail one of the world's largest lprison compledes, with over 10,000 inmates, She Instituted a number at retorms in the management of the Prison, and initiated a number of measures such as detoxitication programs, xoga, vipassana meditation redressing of complaints by prisoners and literacy programmes she won the Ramon Magsaysay award for her work there. She has made improving the condition of the drug additts and the poor people her priority aim. She is also an active proponed of bringing justice to the Grassroots of the nation and bnringing. the official machinery to task if it fails to look affer the good of people. Her tenacity in upholding the tenets of Justice and humanity to its highest standards has a lesson for all of us. We salute this brave daughter of India and her norrves of Steel.

**M. Sugeetha,**
First Year B.Sc Chemistry

*மாதம் ஒரு படைப்பாளர்*

## எழுத்தாளர் ஜெயமோகன்

எழுத்தாளர் ஜெயமோகனின் தந்தை பெயர் எஸ்.பாகுலேயன் பிள்ளை. தாத்தா பெயர் வயக்கவீட்டு சங்கரப்பிள்ளை. பூர்வீக ஊர் குமரி மாவட்டம் விளவங்கோடு வட்டம், திருவரம்பு. இவருடைய தாத்தா அடிமுறை ஆசான். ஆகவே சங்கு ஆசான் என அழைக்கப்பட்டிருக்கிறார். அப்பாவின் அம்மா பெயர் லட்சுமிக்குட்டி அம்மா. அவரது சொந்த ஊர் குமரிமாவட்டம் விளவங்கோடு வட்டம், திருவட்டாறு.

ஜெயமோகன் 1962 ஏப்ரல் 22 ஆம் தேதி பிறந்தார். இவர் சிறு வயதில் பத்மநாபபுரத்திலும் கன்னியாகுமரி அருகே கொட்டாரம் ஊரிலும், பின்னர், முழுக்கோடுவிலும் தொடக்கப்பள்ளிப் படிப்பைத் தொடர்ந்தார். பின்னர் பதினொன்று வகுப்பு வரை அருமனை நெடியசாலை அரசு உயர்நிலைப் பள்ளியில் படித்தார். 1978இல் பள்ளிப்படிப்பு முடித்து, முழுக்காட்டில் இருந்தபொழுது மலையாளப் புதினங்களுக்கு அறிமுகம் ஆனார்.

பின்னர் 1980இல் நாகர்கோயில் பயோனியர் குமாரசாமிக் கல்லூரியில் வணிகவியல் இளங்கலை படிப்பில் சேர்ந்தார். ஆனால் 1982இல் கல்லூரிப் படிப்பை முடிக்காமல் வீட்டை விட்டு வெளியேறிவிட்டார். இவருடைய நெருங்கிய நண்பர் ராதாகிரு'ணன் என்பவரின் தற்கொலையால் மன அமைதி இழந்தார். அக்காலகட்டத்தில் குமரி மாவட்டத்தில் வேரூன்றிய ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் தொடர்பினால் ஆன்மிக நூல்களில் நாட்டம் ஏற்பட்டது என்று ஜெயமோகன் கூறுகிறார். இவருக்குத் துறவியாக வேண்டுமென்ற கனவும் உருவாகியது. இருவருடங்கள் பலவாறாக அலைந்தும், திருவண்ணாமலை, பழனி, காசி ஆகிய ஊர்களில் இருந்தும், பல சில்லறைவேலைகள் செய்தும் வாழ்க்கை நடத்தியுள்ளார்.

1984இல் கேரளத்தில் காசர்கோடு தொலைபேசி நிலையத்தில் தற்காலிக ஊழியராக வேலைக்குச் சேர்ந்தார். அப்பொழுது தொழிற்சங்கத்தின் பெரிய கம்யூனில் தங்கியிருந்தார். அச்சமயம் இடதுசாரி இயக்கங்களின் மீது ஆர்வமும் அவற்றிற்கு பங்களிக்கவும் வாய்ப்புகள் ஏற்பட்டது. அங்கிருந்த நூலகங்களில் தொடர்ச்சியாக வாசிக்க ஆரம்பித்த இவர், இலக்கிய, கோட்பாட்டு விவாதங்களில் ஈடுபடும் பக்குவம் பெற்றார். இக்காலகட்டத்தில் இவருடைய பெற்றோரின் தற்கொலையால் மிகவும் நிம்மதியிழந்து தீவிரமாக அலைச்சலுக்கு ஆளானார்.

இவர் 1991 ஆம் ஆண்டு ஆகஸ்டில் அருண்மொழி நங்கை என்னும் வாசகியைக் காதலித்துத் திருமணம் செய்துகொண்டார். ஜெயமோகன் இப்போது பொதுத்துறை நிறுவனமான பி.எஸ்.என்.எல்லில் பணியாற்றுகிறார். நாகர்கோயிலில் வசிக்கிறார்.

1985இல் எழுத்தாளர் சுந்தர ராமசாமி அறிமுகமானார். அவர் ஜெயமோகனை இலக்கியத்துக்குள் ஆற்றுப்படுத்தினார். அவரை எழுதலாம் என்று தூண்டி

ஊக்கமூட்டினார். இவருடைய எழுத்துக்கள் அதிகமும் அவருக்கே அனுப்பபட்டன. ஒரு மனநோயாளிக்குரிய தீவிரத்துடன் எழுதினார். ‘கைதி’ என்ற கவிதை 1987இல் கட்டைக்காடு ராஜகோபாலன் நடத்திவந்த கொல்லிப்பாவை இதழில் வெளியாயிற்று. 1987இல் கணையாழியில் நதி அசோகமித்திரனின் சிறு குறிப்புடன் வெளியாயிற்று. அது இவருடைய எழுத்துக்கு ஒரு தொடக்கம். தொடர்ந்து நிகழ் இதழில் படுகை, போதி முதலிய கதைகள் வந்து கவனிக்கப்பட்டன.

1988இல் எழுதிய ரப்பர் என்னும் புதினத்தை 1990இல் அகிலன் நினைவுப் போட்டிக்காக சுருக்கி அனுப்பி, அதற்கான விருதைப் பெற்றார். தாகம் என்னும் தலைப்பில் தமிழ் புத்தகாலயம் இந்நூலை வெளியிட்டுள்ளது.

1998 முதல் 2004 வரை ”சொல்புதிது” என்ற சிற்றிதழையும் “மருதம்” என்ற இணைய இதழையும் நண்பர்களுடன் இணைந்து நடத்தினார்.

நாராயணகுருவின் மரபில் வந்த குரு நித்ய சைதன்ய யதியுடனான தொடர்பு மூலம் ஆன்மிகமான ஈடுபாடு அடைந்தார். மலையாளக் கவிஞர் ஆற்றூர் ரவிவர்மாவை தன் ஆசிரியராகவும் முன்னோடியாகவும் குறிப்பிடுகிறார்.

ஜெயமோகன் மலையாளத்திலும் எழுதுகிறார். மாத்ருபூமி, பாஷாபோஷினி இதழ்களில் இவர் எழுதிய கட்டுரைகள் கரன்ட் புக்ஸ் பதிப்பாக நெடும்பாதையோரம் என்ற பேரில் வெளியாகியுள்ளன.

திரைப்படத்துறையிலும் பணியாற்றி வருகிறார். 2006இல் வெளிவந்த கஸ்தூரிமான் இவர் திரைக்கதை எழுதிய முதல் படம். இப்போது நான் கடவுள், அங்காடித்தெரு ஆகிய படங்களுக்குத் திரைக்கதை எழுதியிருக்கிறார்

1990 ஆண்டு அகிலன் நினைவுப்போட்டிப் பரிசைப் பெற்றார். 1992ஆம் ஆண்டுக்கான கதா விருதைப் பெற்றார். 1994ஆம் ஆண்டுக்கான சம்ஸ்கிருதி சம்மான் தேசியவிருது பெற்றுள்ளார். 2008ஆம் ஆண்டு பாவலர் விருது பெற்றார்

***புதினங்கள்:***

விஷ்ணுபுரம், பின் தொடரும் நிழலின் குரல், ரப்பர், காடு, ஏழாம் உலகம், பனிமனிதன் (சிறுவர் புதினம்), கன்னியாகுமரி, அனல்காற்று, இரவு, உலோகம்.

***சிறுகதை நூல்கள்:***

மண், ஆயிரங்கால் மண்டபம், திசைகளின் நடுவே, கூந்தல், ஊமைச்செந்நாய், ஜெயமோகன் சிறுகதைகள் விசும்பு (அறிவியல் சிறுகதைகள்), நிழல்வெளிக்கதைகள் (நவீனத் திகில்கதைகள்), ஜெயமோகன் குறுநாவல்கள் (முழுத்தொகுப்பு).

***அரசியல் கட்டுரைகள்:***

சாட்சிமொழி, இன்றைய காந்தி (காந்திய விவாதங்கள்),

***வாழ்க்கை வரலாறுகள்:***

முன்சுவடுகள், கமண்டலநதி நாஞ்சில் நாடன், கடைத்தெருவின் கலைஞன் ஆ. மாதவன், நினைவின் நதியில் (சுந்தர ராமசாமி பற்றி).

***காப்பியம் :*** கொற்றவை (புதுக்காப்பியம்)

***நாடகம்:*** வடக்குமுகம் (நாடகங்கள்)

***வரலாறு:*** கொடுங்கோளூர் கண்ணகி (வரலாற்றுநூல், மொழியாக்கம்)

***இலக்கியத் திறனாய்வு:***

இலக்கிய முன்னோடிகள் (ஏழு இலக்கிய விமரிசன நூல்கள்), முதற்சுவடு, கனவுகள் இலட்சியங்கள், சென்றதும் நின்றதும், மண்ணும் மரபும், அமர்தல் அலைதல், நவீனத்துவத்தின் முகங்கள், கரிப்பும் சிரிப்பும் ,உள்ளுணர்வின் தடத்தில்... (கவிதை விமரிசனம்), நாவல் (விமரிசனம்), நவீனத்துவத்திற்குப் பின் தமிழ் கவிதை-தேவதேவனை முன்வைத்து, ஆழ்நதியைத் தேடி (இலக்கிய விவாதம்), நவீனத் தமிழிலக்கிய அறிமுகம், இலக்கிய உரையாடல்கள் (நேர்காணல்கள்), ஈழ இலக்கியம் ஒரு விமரிசனப்பார்வை, புதிய காலம் -இலக்கிய விமரிசனம், மேற்குச் சாளரம் மேலை இலக்கிய அறிமுகம், எழுதும் கலை, கண்ணீரைப் பின் தொடர்தல்-இருபத்திரண்டு இந்திய நாவல்கள் குறித்த அறிமுகம்.

***பழந்தமிழ் இலக்கியம்:***

சங்கச் சித்திரங்கள் (பண்டை இலக்கியம்)

***மொழியாக்கம்:***

தற்கால மலையாளக் கவிதைகள், இன்றைய மலையாளக் கவிதைகள், சமீபத்திய மலையாளக் கவிதைகள்.

***அனுபவம்:***

வாழ்விலே ஒருமுறை (அனுபவக் கட்டுரைகள்), இன்றுபெற்றவை (நாட் குறிப்புகள்), புல்வெளிதேசம் (பயணக் கட்டுரை), நிகழ்தல் (அனுபவக் குறிப்புகள்)

***தத்துவமும் ஆன்மீகமும்:***

சிலுவையின் பெயரால், இந்தியஞானம், இந்துஞான மரபில் ஆறுதரிசனங்கள் (தத்துவம்)

***பண்பாடு:***

எதிர்முகம் (இணையவிவாதங்கள்), பண்படுதல் (பண்பாட்டுக்கட்டுரைகள்), தன்னுரைகள் (மேடை உரைகள்).

***பொது :*** நலம் (உடல்நலக்கட்டுரைகள்)

இவைதவிர தனது வலைத் தளத்திலும் நாள்தோறும் இவர் எழுதிவருகின்றார். அவரது வலைத்தள முகவரி : http://www.jeyamohan.in/

**முனைவர் ப. சரவணன்,**
**தமிழ் விரிவுரையாளர்.**

***குறிப்பு:***

எழுத்தாளர் ஜெயமோகனின் பல நூல்கள் நம் கல்லூரி நூலகத்தில் உள்ளன. அவைதவிர எழுத்தாளர் எஸ்.ராமகிருஷ்ணன், அசோகமித்திரன், ஜெயகாந்தன், கல்கி, நா. பார்த்தசாரதி, மு.வ. போன்ற தலைசிறந்த எழுத்தாளர்களின் முழுப்படைப்புகளும் நம் கல்லூரி நூலகத்தில் மாணவர் பயன்பாட்டிற்காகப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

☺

# ஓசோன் படலம்

**அ. அருண்மொழி**
இரண்டாமாண்டு ஆடைவடிவமைப்புத்துறை

ஓசோன் படலம் என்பது புறஊதா கதிர்களிடம் இருந்து காப்பதில் முக்கியமான பங்கு வகிக்கின்றது. புறஊதா கதிர்களிடம் இருந்து வரும் கதிர்வீச்சுக்கள் நேராக பூமியில் வாழும் அனைத்து உயிர்களின் மீதும் படும்போது உயிரினங்கள் உலகில் வாழும் தன்மையை இழக்க நேரிடுகிறது. அவை எரிந்து பஷ்பமாக நேரிடும்.

இத்தகைய கொடிய ஆபத்திலிருந்து நம்மை காத்துக் கொண்டிருக்கும் அரிய படலம் தான். ஓசோன் படலம். ஆயினும், அத்தகைய அரிய படலத்தை நமது அறியாமையால் நாம் இழந்து கொண்டு வருகிறோம். அறிவியல் வளர்ச்சி அபரிமிதமாக வளர்ந்து வரும் இந்நிலையில் நம்மை காத்துக் கொண்டிருக்கும் ஓசோன் படலத்தில் ஓட்டையும் வளர்ந்து கொண்டு வருகிறது. பூமியில் இருந்து செல்லும் வாகனப் புகையாலும், நாம் உபயோகிக்கும் குளிர்சாதனப் பெட்டியிலிருந்து வரும் “ப்ரியான்” எனும் புகையாலும் மேலும் பல அறிவியல் வளர்ச்சியிலிருந்து வரும் இடையூறுகளினால் ஓசோன் படலத்தில் இன்று ஓட்டை ஏற்பட்டுள்ளது.

இதன் விளைவாகத்தான் இன்று மிக அதிகமாக தோல் சம்பந்தமான நோய்களும், புற்றுநோய் போன்ற கொடிய வியாதிகளும் உலகை ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கின்றன. ஆனால், அறிவியல் என்பது இன்றியமையாத ஒன்றாக இன்றைய வாழ்வில் அமைந்து விட்டது. இதன் விளைவை குறைக்க வேண்டுமானால் நாம் உபபோகிக்கும் அறிவியல் வளர்ச்சிகள் எவை ஓசோன் படலத்தைப் பாதிக்கின்றனவோ அவற்றைக் குறைத்துக்கொள்ள வேண்டும். என்பதே இதற்கு ஒரு முடிவாக இருந்தாலும் ஏற்கனவே ஏற்பட்டிருக்கும் ஓட்டையை நம்மால் எதுவும் செய்ய இயலாது என்பதே இதில் மிகவும் வருத்தம் படக்கூடிய விளைவாகும்.

மரங்களை அதிகப்படியாக வளர்ப்பதினாலும் கூட இந்தப் புற ஊதா கதிர்களால் வரும் விளைவைக் குறைத்து. மேலும் ஓசோன் படலத்தில் வளர்ந்து வரும் ஓட்டையைத் தடுக்க இயலும்
“நம்மைக் காக்கும் படலத்தை நாம் காக்காவிடில் நம்மை யாராலும் காக்க இயலாது.

☺

### அட்டை ஓவியம், புகைப்படம்

**முன்பக்க அட்டைப் புகைப்படம்:**
ஸ்ரீரங்கம் அரங்கநாதர் கோவில் ஆயிரங்கால்மண்டத்தில் நிகழ்த்தப்பட்ட அகழ் வாராய்சியில் வெளிக்கொணரப்பட்ட யானைச் சிற்பம். **புகைப்படம் : *மலர்விழி,*** இளங் கலைத் தமிழ் இலக்கியம் முதலாண்டு

**பின்பக்க அட்டை ஓவியம்:**
***சௌந்தர்யா***
இளங்கலை ஆடைவடிவமைப்பு மற்றும் துகிலியல்துறை இரண்டாமாண்டு

தொடர்செய்யுள்: **கே.எஸ்.ஆர். பிள்ளைத்தமிழ்**

பகுதி – 08 – சிறுபறை

கவிஞர் ***திரு. மோ. ஆ. யுவராசா,***
தமிழ்ப்பேராசிரியர்,
கே.எஸ்.ஆர். கல்வியியல் கல்லூரி.



*குழந்தையாய் இருந்து சிறுவனாய் வளர்ந்துவிட்ட (கே.எஸ்.ஆர் ஆகிய) அப்பிள்ளையைச் சிறுபறை (வாத்தியம்) கொட்டி விளையாடு என்று அழைப்பது சிறுபறைப்பருவம் ஆகும். பிள்ளையின் 5ஆம் ஆண்டு முதல் 9ஆம் ஆண்டுவரை நிகழ்வது இது.*

“மாணிக்கம் மரகதம் வைரம்கோ மேதகம்
மங்காத பத்ம ராகம்
மாசிலா வெண்முத்து பவளம்வை டூரியம்
மதிப்புடன் ஒளிரும் நீலம்
ஆணிப்பொன் என்கின்ற அவைபத்தும் நீயென்று
அழகுபச்சி யம்மை சொல்வாள்
அதுகேட்டு உன்தந்தை சென்னிமலைக் கவுண்டரும்
அளவிலா மகிழ்ச்சி கொள்வார்
பூணும்பொன் நகையாட புகழ்சென்னி முடியாட
பூச்சூடி நீயும் வந்தால்
பொன்மேனி நோகுமே கண்ணெச்சில் ஆகுமே
எனப்பாட்டி நெட்டி கொள்வாள்
காணிக்கை எனவரும் கவிஞர்க்குப் பின்னாளில்
கனகமழை பெய்யும் ரெங்கா!
கல்விநகர் பின்னாளில் கட்டிடும் கைகளால்
காணுசிறு பறையைக் கொட்டே!
செங்கோடு தலத்திலே கருவேப்பம் பட்டியில்
செகம்போற்ற பிறந்த செல்வா!
சிறுவனாய் இருந்தாலும் பெருமிதம் மிக்கவா!
சிறந்ததே எண்ணும் சேயே!
பொங்கியே வருகின்ற பொன்னியாம் காவிரி
புகுந்து வரும் கொங்குநாட்டில்
புதுப்புது பள்ளிகள் புதுமைமிகு கல்லூரி
பின்னாளில் ஆக்கும் செல்வா!
பங்கிலே உமைதன்னைப் பாசமுடன் சேர்த்தவன்
பிறைசூடும் இறைவன் தன்னைப்
பண்புடன் அன்புடன் இன்புடன் நெஞ்சிலே
பதித்துவிளை யாடும் மைந்தா!
சிங்கார ரங்கா! மங்காத புகழனே !
சிறுபறை கொட்டு நீயே!
செய்கையை எப்போதும் சிறப்பாக்கும் கைகளால்
சிறுபறை கொட்டு நீயே!